DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT
**STC.No.206/2024**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருண்குமார் | | : |
| த/பெ | : சேகர் | மதம் | : |
| கிராமம் | : அயனாவரம் | தொழில் | : - |
| வட்டம் | : சென்னை | வயது | : 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 06.03.2026**

<u>குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**</u>: **PW1**

பிரமாண வாக்கு மூலத்தை படித்து பாரத்து தான் கையெழுத்து செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரியும், புரிந்து தான் கையெழுத்து செய்தேன். எதிரிக்கு பணம் கொடுத்ததாக புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் பெயர் பிரமாண வாக்குமூலத்தில் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறுவது உண்மையாக இருந்திருந்தால் அதை குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணம் திருப்பி செலுத்தும் சட்டப்படி கடப்பாடு பொறுப்புள்ளதாக புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது புகார் மனு, மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பிரசன்னா என்பவர் பணம் வாங்கியதாக தெரிவித்துள்ளேன் எதிரி வாங்கியதாக எங்கும் கூறவில்லை என்றால் அவர்கள் குடும்பத்தார் அனைவரும் ஒரே நிறுவனத்தை நடத்தி வருகிறார்கள். புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனமானது பிரசன்னா அபிராமன் என்பவர் பெயரில் தான் உள்ளது

எதிரியின் பெயரில் இல்லை என்றால் அதை குறித்து தெரியாது. பிரசன்னா என்பவர் தான் கடன் வாங்கியுள்ளார் எதிரி வாங்கியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தான் பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளேன், குடும்பத்திற்கு கொடுத்ததாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நிறுவனத்திற்கு கொடுத்த கடன் பிரசன்னா உரிமையாளர் என்ற நிலையில் எதிரி அவரது அண்ணனுக்கு கொடுத்த கடனை தான் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு எழுத்துப்பூர்வமாக ஆவணம் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில வைத்து எதிரி பிரசன்னா வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார், அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி மீது இவ்வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. முகாந்திரம் உள்ளது என்பதை நிரூபிக்கவும், எனக்கும் எதிரிக்கும் நடந்த பரிவர்த்தனை உள்ளதா என்பதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை, நண்பர் என்ற அடிப்படையில் பிரசன்னாவிற்கு பணம் கொடுத்தேன். எதிரி என்னிடம் பணமும் வாங்கவில்லை காசோலையும் தரவில்லை இது பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரி அவரது தந்தைக்கு செலவிற்காக தந்த காசோலையை தவறுதலாக என்னிடம் கொடுத்ததற்கு எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எதிரி தான் அந்த புகைப்படம் எடுத்தார்.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K